| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | **மதுரை** | காலம் : | **17/01/2024** | முதல் | **21/01/2024** |
| அறிக்கை எண் : | **005/ 2024** | வெளியீட்டு நாள் : | | **16/01/2024** | |

### மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 31°- 32° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21° - 23° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (11.01.2024 முதல் 15.01.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 21-01-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11/01 | 12/01 | 13/01 | 14/01 | 15/01 | தேதி | நாள்-1 17/01 | நாள்-2 18/01 | நாள்-3 19/01 | நாள்-4 20/01 | நாள்-5 21/01 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 1 | 1 | 2 |
| 29 | 32 | 31 | 32 | 32 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 31 | 30 | 30 | 30 | 29 |
| 23 | 23 | 21 | 22 | 21 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 21 | 21 | 20 | 20 | 20 |
| 4 | 5 | 4 | 4 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 3 | 0 | 0 | 1 | 1 |
| 84 | 80 | 83 | 88 | 82 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 80 | 90 | 90 | 80 |
| 55 | 53 | 53 | 53 | 50 | | 40 | 40 | 50 | 40 | 40 |
| 7 | 9 | 7 | 6 | 7 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 6 | 8 | 10 | 10 |
| வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு |

### குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜனவரி 19, 20 மற்றும் 21ம் தேதிகளில் மிக லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 29°-31° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 20°-21° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் தெளிவாக காணப்படும். மணிக்கு 6 முதல் 10 கி.மீ வேகத்தில், வடகிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலை முன்னறிவிப்பு (19 - 25 ஜனவரி 2024):**

### மழைப்பொழிவு :

19-01-2024 - 25-01-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் பொதுவாக வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு உள்ளது

### அதிகபட்ச வெப்பநிலை :

19-01-2024 - 25-01-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பானது முதல் இயல்பை விட சற்று குறைவாக காணப்படும். 26° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

19-01-2024 - 25-01-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 16° செல்சியஸ் முதல் 20° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

அடுத்த சில நாட்களுக்கு வறண்ட வானிலேயே எதிர்பார்க்கப்படுவதால் மண்ணின் ஈரப்பதத்தை பொருத்து, வேளாண்மை பயிர்கள் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு நீர் பாய்ச்சும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : நெல் , மல்லிகை, கால்நடை.**

**நெல் :**

நெல் பயிரில் தானியம் நிறமாற்ற நோய் தாக்குதல் தென்படுகின்றது. இவ்வகை நோய் அறுவடை காலத்திற்கு முன்போ அல்லது பின்போ தானியங்களை பாதிக்கிறது. இவை இடம் மற்றும் காலநிலை பொறுத்து அதிகமாகிறது. இந்நோய் தாக்குதலால் நெல்மணியில் அடர் பழுப்பு நிறம் அல்லது கருப்பு நிற புள்ளிகள் தோன்றும். இதன் காரணமாக தரமற்ற தானியங்களும் மகசூல் குறைவும் ஏற்படும். இதனைக் கட்டுப்படுத்த, பூப்பூக்கும் தருணத்தில் ஒரு ஏக்கருக்கு 200மில்லி என்ற அளவில் புரோப்பிகனசோல் மருந்தினை கலந்து 12 நாட்கள் இடைவெளியில் 2 முறை தெளிக்க வேண்டும்.

**மல்லிகை:**

மல்லிகைப் பயிரில் ஒருவித மலர் கொசுவின் தாக்குதல் பரவலாக தென்பட வாய்ப்பு உள்ளது. இவ்வகையான புழுக்கள் மலரின் மொட்டுகளின் அடிப்பாகத்தில் நுழைந்து வீக்கத்தை ஏற்படுத்துகின்றன.

இதன் காரணமாக செடிகள் வளர்ச்சி குன்றி காய்ந்து விடும்.

இந்த நோய் தாக்கத்தை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.75 கிராம் தையோமெத்தாக்சம் 2½ சதம் அல்லது 3மில்லி நோவாலுரான் கலந்து தெளிக்கவும்.

**கால்நடை:**

ஆடு வளர்க்கும் விவசாயிகள் தங்களின் வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளில் வெளிப்புற ஒட்டுண்ணிகளை நீக்க 2 மில்லி பூட்டாக்ஸ் மருந்தினை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து ஆடுகளில் வெளிப் புறங்களில் மட்டும் பூச வேண்டும்.